Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Cradle Songs of Different Relationships in the Cine Songs of Kannadasan

**Rajakumari,** Full-Time Research Scholar, Lakshmipuram Arts and Science College, Kanniyakumari District.
**ORCiD: https://orcid.org/0000-0002-1484-6264**
**DOI: 10.5281/zenodo.6622617**

## Abstract

*Kannadasan is a Tamil poet, dramatist, orator, cine verse writer and a multi faceted personality. In the cine songs, he had touched the themes such as love, philosophy, nostalgia, and other themes of life but the cradle songs he had written are very commendable. He made it as a significant genre in Tamil movies. Still, there are admirers of his songs and are very dear to that for its everlasting aesthetic touch. He had written cradle songs sung by mother, father, maternal uncle, aunt, maternal aunt, brother and on other relationships. This article delineates the cradle songs sung by the different relationships from the cine songs of Kannadasan.*

**Keywords:** Cradle Songs, Different Relationships, Cine Songs, Kannadasan.

## References

[1] Kavingar Kannadasan. *Thirai Isai Padalgal Thoguthi 1*, Kannadasan Pathippagam, 2011.
[2] Kavingar Kannadasan. *Thirai Isai Padalgal Thoguthi 2*, Kannadasan Pathippagam, 2014.
[3] Kavingar Kannadasan. *Thirai Isai Padalgal Thoguthi 5*, Kannadasan Pathippagam, 2014.
[4] N. Subbureddiyar. *Bharathiyar Kavithaikal*. Amar Offset, 2009.
[5]Ko. Periyakannan, *Eliya Iniya Uraiyil Kambaramayanam*. Amar Pathippagam, 2017.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# கண்ணதாசன் திரையிசையில் பல்வேறு உறவுகளின் தாலாட்டுப் பாடல்கள்

**ஈ. ராஜகுமாரி,** முனைவர்பட்ட ஆய்வாளர், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கன்னியாகுமரி.
ORCiD: https://orcid.org/0000-0002-1484-6264
DOI: 10.5281/zenodo.6622617

**ஆய்வுச்சுருக்கம்**

*கன்னித்தமிழில் காவியப் படைப்புகள் பல தந்த கண்ணதாசன் அவர்களின் பங்களிப்பு திரைத்துறையிலும் தனியிடத்தில் வைத்து போற்றப்பட வேண்டிய சிறப்பம்சமாகும். திரையிசையில் காதல், தத்துவம், சோகம் என எல்லாதரப்பு பாடல்களையும் தந்தாலும் தாலாட்டுப் பாடல்களையும் தனித்துவ அடையாளத்தோடு தந்தவர் கண்ணதாசன் அவர்கள். கண்ணதாசன் அவர்களின் திரைசயிசை பாடல்களில் தாய், தந்தை, தாய்மாமன், அத்தை, சித்தி, அண்ணன் என எல்லாநிலையுமான உறவுகள் பாடும் தாலாட்டுப்பாடல்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** கண்ணதாசன், திரையிசை, பல்வேறு உறவுகள், தாலாட்டுப் பாடல்கள்

## முன்னுரை

கன்னித்தமிழில் காவியப் படைப்புகள் பல தந்த கண்ணதாசன் அவர்களின் பங்களிப்பு திரைத்துறையிலும் தனியிடத்தில் வைத்து போற்றப்பட வேண்டிய சிறப்பம்சமாகும். திரையிசையில் காதல், தத்துவம், சோகம் என எல்லாதரப்பு பாடல்களையும் தந்தாலும் தாலாட்டுப் பாடல்களையும் தனித்துவ அடையாளத்தோடு தந்தவர் கண்ணதாசன் அவர்கள். கண்ணதாசன் அவர்களின் திரைசயிசை பாடல்களில் தாய், தந்தை, தாய்மாமன், அத்தை, சித்தி, அண்ணன் என எல்லாநிலையுமான உறவுகள் பாடும் தாலாட்டுப்பாடல்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தாலாட்டு

தால் + ஆட்டு என்பதே தாலாட்டு எனப்படும். தால் என்றால் நாக்கு, ஆட்டு என்பது அசைத்தல் எனும் பொருள் தரும்படி நாவை அசைத்துப்பாடுதல் தாலாட்டு எனப்படுகிறது. இன்றைய நடைமுறையில் நகரவாழ்க்கையில் மறைந்து போகின்ற பண்பாடுகளுள் தாலாட்டு பாடுதலும் ஒன்றாகும். கிராமப்புறங்களில் தாலாட்டுப்பாடுதல் அதிகமாகக் காணப்படுகின்றது. **"பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா"** என்று ஆச்சரியப்பட்ட பாரதி,

**"காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும்**
**பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்" (குயில்பாட்டு, 5 : 57 – 58)**

என்று தாலாட்டுப்பாடலை, கைக்குழந்தை இனம் கண்டு கொள்ளுமென்று பதிவு செய்துள்ளார். நள்ளிரவில் சிறுகுழந்தைகள் அதிகசத்தம் போட்டு அழுதால் யட்சிணிப் பேய்களால் குழந்தைகளுக்கு தொந்தரவு ஏற்படுமென்று கருதி, பெண்கள் குழந்தையின் அழுகுரலைவிட அதிககுரலெடுத்து தாலட்டுப்பாடுவது இன்றும் நடைமுறையிலுள்ள வழக்கமாகும்.

## இலக்கியங்களில் தாலாட்டு

தாலாட்டை பல்வேறு இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன.

**“இரியல் மகளிர் இலைஞெமலுள் ஈன்ற**

**வரிஇளம் செங்காற் குழவி – அரையிரவில்**

**ஊமன் தாராட்ட உறங்கிற்றே” (முத்தொள்ளாயிரம் - 52)**

என்று **முத்தொள்ளாயிரம்** தாலாட்டு என்பதனை தாராட்டு என குறிப்பிடுகிறது. **கம்பர்,**

**“காலுண்ட சேற்றுமே கன்று உள்ளிக்**

**கனைப்பச் சோர்ந்த பாலுண்டு துயிலும்**

**பச்சைத் தேரை தாலாட்டுப் பண்ணை” (கம்பராமாயணம். நாட்டுப்படலம், 13 – 14)**

என்று தாலாட்டை **கம்பராமாயணத்தில்** பதிவு செய்துள்ளார்.

முதன்முதலில் தாலாட்டு பாடியவர் பெரியாழ்வாராவார்.

**“மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி**

**ஆணிப்பொன்னால் செய்த வண்ண சிறுதொட்டில்...**

**வையம் அளந்தானே தாலேலோ”**

என்று தானும் ஓர் தாயாகி கண்ணனை தாலாட்டியுள்ளார் **பெரியாழ்வார். குலசேகர ஆழ்வார்ராமனை,**

**“மன்னு புகழ் கோசலை தன் மணிவயிற்றில் வாய்த்தவனே...**

**கணபுரத்தென் கருமணியே என்னுடைய இன்னமுதேஇராகவனே தாலேலோ” (காகுத்தன் த.10)**

என்று தாலாட்டியுள்ளார்.

**“பொழுது புலர்ந்தது; யாம் செய்த தவத்தால்,**

**புன்மையிருட் கணம் போயின யாவும்...**

**விழி துயில்கின்றனை இன்னும் எம்தாயே!**

**வியப்பது காண்! பள்ளி யெழுந்தருளாயே! (பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி 1-8)**

என்று பாரத அன்னைக்கு பள்ளிஎழுச்சி பாடல் தந்த பாரதி தாலாட்டு பாட ஏனோ மறந்துவிட்டார் போலும்.

**தாய்பாடும் தாலாட்டு**

தாலாட்டு தாய்மைக்கே முதலிடம் கொடுக்கிறது. பூமியில் பிறக்கின்ற குழந்தையானது முதலில் அடையாளம் கண்டு கொள்வது தன்னுடைய அன்னையையே. முதலில் தாயின்வாசம், குரல் இவற்றை அடையாளம் கண்டு கொள்ளும் குழந்தை தாய்மையின் தாலாட்டுக்கு கட்டுண்டு கண்மூடி துயில்வதை கண்கூடாகக் காண்கிறோம். மாற்றுக் குரலுக்கு கண்விழித்து அழுவதிலிருந்தே தாய்மையின் தாலாட்டை இனம் கண்டுகொள்ளும் குழந்தையின் பாங்கே தாயின் தாலாட்டை நமக்கு தரம் பிரித்துக்காட்டுகிறது. **காந்தி பிறந்த மண்** திரைப்பாடலில்,

**“தாய்பாடும் பாட்டுத்தானே தாலாட்டுப் பாட்டு**

**தங்கமே பள்ளிகொள்ளு என் பாட்டைக்கேட்டு...**

**பாலும் கொடுத்து சீவிமுடித்து பார்க்கும்**

**தாய்தானே முதல் சொந்தம் மகனே” (க. கண்ணதாசன்தி.இ.பா. தொ-5)**

என்றுதாலாட்டுஎன்பதுதாய்பாடும்பாட்டுஎன்றுதாய்மைக்கேமுன்னுரிமைத்தருகிறார்.

**“தன்மானச் செல்வங்கள் வாழ்கின்ற பூமியில்**

**வில்லேந்தும் வீரன் போலவே – மகனே நீவந்தாய்**

**மழலைச் சொல் தந்தாய் வாழ்நாளில் வேறென்ன வேண்டுமம்மா**

**சிங்காரப்பு ன்னகை கண்ணாரக் கண்டாலே சங்கீத**

**வீணையும் ஏதுக்கம்மா" (க.கண்.தி.இ.பா. தொ – 1)**

என்று தன் குழந்தையைவிட இவ்வுலகில் தனக்கு வேறு எந்த செல்வங்களும் தேவையில்லை என்று தாய்பாடும் தாலாட்டாக **மகாதேவி** திரையிசைப் பாடலில் பதிவு செய்துள்ளார்.

**"நீ இல்லா பெருமை என்ன அதுநிம்மதி ஆகுமா**

**அம்மா என பெயர் சொல்லாத அந்த பிறவி என்னவோ..." (பிள்ளைபாசம், தொ – 5 –)**

என்று குழந்தை இல்லாத வாழ்வு அர்த்த மற்றவாழ்க்கையென்றும், அப்பிறவியே வீணானதென்றும் சேய் புகழ்பாடும் தாயின் தாலாட்டுபாடலும், மேலும் பல பாடல்களை தாயின் தாலாட்டாக பதிவுசெய்துள்ளார்.

**தந்தைபாடும் தாலாட்டு**

தந்தையும், தாயாகி தாலாட்டு பாடுதலும் ஓர்பழக்கமாக இருப்பதைக் காணலாம். இறைவனே தாயாகி **தாயுமானவராகி** நிற்பதை ஆன்மீகத்தில் அறிகிறோம். தந்தைக்கு முன்னுரிமை கொடுத்தே **தந்தையார் நாடு** என்று **ஜெர்மனி நாடு** அறியப்படுகிறது. தந்தை பாடும் தாலாட்டுப் பாடல்களையும் கண்ணதாசன் அவர்கள் பதிவு செய்துள்ளார்கள்

**"இல்லை ஒரு பிள்ளையென்று ஏங்குவோர் பலரிருக்க**

**இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வமகனே..."**

என்று மாற்றுத் திறனாளியான தந்தை குழந்தையை சீரோடு வளர்க்கமுடியாதென்ற ஆதங்கத்தில், தந்தைபாடும் தாலாட்டாக பதிவு செய்துள்ளார். மேலும்,

**"நான்கு பேர்கள் போற்றவும் – நாடு உன்னை வாழ்த்தவும்**

**மானத்தோடு வாழ்வது தான் சுயமரியாதைநல்ல**

**மனமுடையோர் காண்பது தான் தனிமரியாதை" (வேட்டைக்காரன், க.கண்.தி. பா. தொ...)**

என்று தன் குழந்தை, நாட்டு மக்கள் போற்றும் படி மானத்தோடு வாழவேண்டுமென்று அறிவுறுத்தி தந்தை பாடுவதாகவும், மேலும் பல பாடல்கள் தந்தையின் தாலாட்டாகப் பதிவு செய்துள்ளார்.

**தாய் மற்றும் தந்தையின் தாலாட்டு**

ஒரு குழந்தையின் வளர்ப்புக்கு தாய் தந்தை இருவரின் பங்களிப்பும் இணைந்திருக்க வேண்டும். அன்னையின் அன்பும், கண்டிப்பு நிறைந்த தந்தையின் அரவணைப்புமே ஒரு குழந்தையை பூரணம் நிறைந்தவனாக்குகிறது. பெற்றோர் சேர்ந்து பாடும் தாலாட்டுப்பாடல்கள் பல கண்ணதாசன் கை வண்ணத்தில் மிளிர்கின்றன.

**"அஞ்சுக்கு பின்னாலே வந்த பிள்ளை - இது**

**ஆறாவதாய் வந்த செல்லப்பிள்ளை**

**ஆசைக்குப் பிள்ளை ஆறாச்சு - இனி**

**அடுத்து தடை செய்ய ஆராய்ச்சி"**

என்று அளவான குடும்பமாக இருந்தால் தான் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க முடியுமென்பதால் அதிகக் குழந்தைகளை பெற வேண்டாம் என்ற நோக்கத்தில் அதற்காக அடுத்து என்ன செய்வது என்ற நோக்கத்தையும் உட்புகுத்தி பெற்றோர் இணைந்து பாடும் தாலாட்டுப்பாடலாகும் இப்பாடல். மேலும்,

**"பொன்னுலகம் கண்ணில் காணும்பரை கண்ணுறங்கு...**

**பூஞ்சிட்டு கன்னங்கள் பொன்மணி தீபத்தில்**
**பால் பொங்கல் பொங்குது பன்னீரிலே – பொங்கல்**
**பிறந்தாலும் தீபம் எரிந்தாலும் ஏழைகள் வாழ்வது கண்ணீரிலே" (க.கண்.தி.பா.தொ-4)**

என்று பெற்றோர் தங்களின் ஏழ்மையை தாலாட்டிலேயே தங்கள் குழந்தைக்கு உணர்த்தி, உயர்வையும் தாழ்வையும் துலாபாரமாக்கும் முயற்சியாக இப்பாடலில் உணர்த்தியுள்ளார் கண்ணதாசன் அவர்கள். மேலும் இது போன்ற பலபாடல்கள் பெற்றோர் இணைந்து பாடும் தாலாட்டுப் பாடல்களாக பதிவுசெய்துள்ளார்.

**மாமன்பாடும் தாலாட்டு**

தாய்க்கு அடுத்தபடியாக போற்றக்கூடிய தாய்வழி சொந்தம் தாய்மாமன் உறவாகும். செல்வ செழிப்போடிருந்த மாமன் ஏழ்மை நிலையாகி மருமகனை தாலாட்டுவதாக,

**"பல்லக்கில் பட்டுக்கட்டிப் பரிசுகள்எடுத்து பச்சைபவழம்**
**முத்துமாணிக்கம் கொடுத்து செல்லக்கிளிக்கு வரும்மாமனின்**
**விருது- ஐயாசிந்தைகலங்காதே நாளைக்குவருது…அன்னைக்கு**
**வீடுஇன்று சின்னஞ்சிறுகூடு- மாமன் அரண்மனை**
**கட்டிவைப்பான் நாளை அன்போடு" (கவி. கண். தி.பா.தொ-5)**

என்று மீண்டும் செல்வந்தனாகி, முத்தாலும், மாணிக்கத்தாலும் பரிசுபொருட்கள் தந்து பரவசப்படுத்துவேனன்று சொல்வதாக பதிவுசெய்துள்ளார். மேலும் காலத்தால் பிரிந்த உறவுகள் நேரம்கூடி சேரும் போது மகிழ்ச்சிபிரவாகத்தில் பாடும் மாமனின் தாலாட்டாக,

**"மஞ்சள்கொண்டாடும் மாணிக்கமே மழலைநீ கண்டது**
**மழலைநீ காணும் நேரத்திலே மாமன்தான் வந்தது**
**ஆறுரெண்டாகலாம் மீண்டும் ஒன்றாகலாம்**
**காலம்விளையாடலாம் மீண்டும் திசைமாறலாம்**
**யாரும் இடம்மாறலாம் தாய்மை இனம்மாறுமோ" (கவி. கண். தி.பா, தொ-5)**

என்று மாறாத உறவுமாமன் உறவென்று கண்ணதாசன் அவர்கள் மாமன் தாலாட்டு மூலம் பதிவுசெய்துள்ளார்.

**அத்தைபாடும் தாலாட்டு**

தாய்மாமன் தாலாட்டுபோல தந்தைவழி உறவான அத்தையின் தாலாட்டும் கண்ணதாசன் அவர்களால் அருமையாக பாடப்பட்டுள்ளது.

**"தங்ககடியாரம் வைரமணியாரம் தந்துமணம் பேசுவார் - மாமன்**
**தங்கைமகளான மங்கைஉனக்காக உலகைவிலை பேசுவார்" (கவி. கண். தி.பா, தொ-1)**

என உலகையே விலையாகக்கொடுத்து தங்கைமகளை தமையன், தன்மகனுக்கு உரிமையாக்கிக் கொள்வானென்று அத்தைபாடும் பாசமலர் தாலாட்டாக பதிவுசெய்துள்ளார். மேலும்,

**"அத்தைபெறும் பெண்தானே உன்னோடுகூட்டு அம்மாடிபள்ளிகொள்ளு**
**என்பாட்டைக் கேட்டு- சீரும்கொடுத்து பெண்ணும் கொடுத்தநான்**
**சொந்தமில்லையா என்மருமகனே அழகிய சொக்கலிங்கம்**
**சிலநாளில் வருவான் - அவன்வந்த**
**பின்னாலே பெண்ணொன்று தருவான்" (கவி. கண். தி.பா, தொ-5)**

என தந்தையின் உடன்பிறப்பு உறவான அத்தை, சகோதரன் மகனுக்கு தன் பெண்ணை மணக்கத் தருவதால் தானும் சொந்தம் மிகுந்தவளாய், அத்தை பாடும் தாலாட்டாய் அழகுற வடித்துள்ளார் கண்ணதாசன் அவர்கள்.

**தாத்தாபாடும் தாலாட்டு**

பெற்றகுழந்தையை பாரமாக எண்ணும் தாய், குழந்தையைக் கவனிக்காமல் இருக்கவே தாயன்பில்லாத குழந்தையை தாலாட்டும் தாத்தா,

**“கடவுள்இதிலே உனக்கும்உறவோ அவனின்அம்மா அப்பாஎவரோ**

**அவரேஒருநாள் தாயும்ஆனார் உமையாள்பாலில் சம்பந்தர்வாழ்ந்தார்” (சத்தியசுந்தரம், தொ – 4)**

என்று தாயின் பரிவில்லாமல் இருக்கும் குழந்தையை, தாயும் தந்தையுமில்லாத ஆதியும், அந்தமுமற்ற இறைவனுக்கு உறவாக்கி, ***சீர்காழி சட்டை நாதசுவாமி*** ஆலய திருக்குளத்தில் குளிப்பதற்காக நீரில் மூழ்சிய தந்தையைக் காணாமல் அழுத பாலகன் **ஞானசம்பந்தருக்கு உமையாள்** பாலூட்டி அரவணைத்ததைக் குறிப்பிட்டு தன்பேரக் குழந்தை தாய்பாலில்லாமல் வாழ்வதை வருத்தத்தோடு பாடுவதாக தாத்தாவின் தாலாட்டுப்பாடலாக கண்ணதாசன் அவர்கள் பதிவுசெய்துள்ளார்கள்.

**சித்திபாடும் தாலாட்டு**

தாயின் அரவணைப் பில்லாமல் வாழும் குழந்தைகள் பெரியபோராட்டங்களை சந்தித்தே வாழவேண்டியிருக்கும். **“பெற்றதாய் இல்லாவிட்டால் பெற்றஅப்பன் சிற்றப்பன்”** என்பது முதுமொழியாகும். பெற்றதந்தையே, சிறிய தந்தை ஆகும் போது தந்தை இரண்டாவதாக மணந்து கொள்ளும் சித்தியின் உறவை சொல்லவும் வேண்டுமோ? ஆனால் **சித்தி** திரைப்டத்தின் நாயகியோ,

**“ஆரிராரிரோ ஆரிரராரோ காலமிதுகாலமிது கண்ணுறங்குமகளே**

**காலமிதை தவறவிட்டால் தூக்கமில்லைமகளே…மாறும்கன்னிமனம்**

**மாறும்கண்ணன் முகம்தேடும் ஏக்கம்வரும்போது தூக்கமென்பதேது….**

**கைநடுங்கிகண் மறைந்து காலம்வந்து தேடும்**

**காணாத தூக்கமெல்லாம் தானாகசேரும்” என (கவி. கண். தி.பா, தொ-1)**

பெண்களுக்கான தூக்கம் குழந்தைப் பருவமும், இறப்புமேயாகும். இடைப்பட்ட பருவம் ஒவ்வொன்றிலும் பிரச்சினைகள் துரத்துவதால் தூக்கமும் தூரமாகி போய்விடுகிறது. ஆகவே இப்போதே நன்றாகத் தூங்குவென பாடும் சித்தியின் அன்பு தாலாட்டை பதிவுசெய்துள்ளார். மேலும்,

**“அன்னையென்று ஆகுமுன்னே ஆராரோபாட வந்தேன்**

**என்னவென்று பாடுவேன்கண்ணே என்னவார்த்தைக் கூறுவேன்கண்ணே**

**பக்கம்வரப் பாதையில்லை- பால்கொடுக்கும் நிலையுமில்லை**

**வெட்கம்வரும் வேளையல்லாவா? – கண்ணா**

**விழிகள்பேசும் நேரமல்லவா. ஆரிரோ! ஆரிரோ!” (கவி-கண்தி.பா.தொ-1)**

என அழுகின்ற குழந்தையை அணைக்க முடியாத நிலையில் இருந்து கொண்டு பரிதவிப்போடு பாடும் சித்தியின் தாலாட்டை **தாய்க்குத் தலைமகன்** திரைப்படத்தில் எழுதியுள்ளார்.

**அண்ணன் பாடும் தாலாட்டு**

அண்ணன் என்னும் அன்பான உறவு கிடைக்கப்பெற்ற தங்கை வரம் பெற்றவளாகிறாள். தங்கையின் தேவைகளை அறிந்து பொறுப்புகளை பொறுமையோடு நிறைவேற்றும் தமையனும்

இன்னொரு தந்தையே. தங்கையின் தூக்கத்தைப் பார்த்து மனதில் மானசீகமாகப் பாடும் அண்ணனின் தாலாட்டாக,

**“மலர்களைப் போல்தங்கை உறங்குகின்றாள்- அண்ணன்**
**வாழவைப்பான் என்றுஅமைதி கொண்டாள்**
**கலைந்திடும் கனவுகள் அவள்படைத்தாள்**
**அண்ணன் கற்பனைத்தேரினில் பறந்துசென்றான்” (கவி. கண். தி.பா, தொ-1)**

என்று குறிப்பிட்டுள்ளார்.

**“அருகில்வைத்துத் தூங்கச்செய்யும் தாய்இல்லாதது**
**ஆசை துன்பம்வெளியில் சொல்லவாய் இல்லாதது**
**நாதியில்லை என்றுஉன்னை ஊர்சொல்லலாமா**
**இங்குநானிருந்தும் உனக்குஅந்த பேர்வரலாமா?” (கவி. கண். தி.பா, தொ – 1)**

என தாயாகி, தங்கையைத் தாலாட்டும் அண்ணனின் தாலாட்டுப் பாடல் இதுவாகும்.

**காதலர் பாடும் தாலாட்டு**

காதலர் தங்கள் இணையைத் தூங்கவைக்கப் பாடும் காதல் தாலாட்டும் கண்ணதாசன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது- காதலன் தாலாட்டாக **ஹலோமிஸ்டர் ஜமீன்தார்** திரைப்படத்தில்,

**“நாளும்தூக்கம் இல்லாமல்ஓடும் நதியினைப்போல**
**உன்னைத் தூக்கமின்றி காக்கவைப்பேனே காதல்பாட்டுப்**
**பாடுவேன் தாலாட்டுப்பாடுவேன் பார்வைசொல்லும் சாடையிலே**
**உலகை வெல்லுவேன்”.**

என பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், கன்னிமங்கை ஒருத்தி தன் நிலை மறந்து குழந்தை உள்ளத்தோடு இருக்கிறாள். அவளை பாதுகாக்கும் காதலன்

**“காதல்கொண்டேன் கனவினை வளர்த்தேன்**
**கண்மணி உனைநான் கருத்தினில் நிறைப்பேன்**
**உனக்கே உயிரானேன் என்னாளும்எனை நீமறவாதே**
**நீஇல்லாமல் எதுநிம்மதி நீதான்என்றும் என்சன்னிதி” (க.கண்.தி.இ.பா. தொ – 1)**

என்று குழந்தையாகப் பாவித்து தன் மனம்விரும்பியவளை தாலாட்டுவதாகக் குறிப்பிட்டுள்ளார். காதலனைவிட ஒருபடி மேலே சென்று காதலி, காதலனின் நிம்மதிக்காக, தானே தூக்கமும், அமைதியுமாக மாறிவிடுவதாக,

**“தூக்கம் உன்கண்களைத் தழுவட்டுமே**
**அமைதி உன்நெஞ்சில் நிலவட்டுமே**
**அந்ததூக்கமும் அமைதியும் நானானால் உன்னை**
**தொடர்ந்திருப்பேன் என்றும் துணையிருப்பேன்” (கவி. கண். தி.பா, தொ-1)**

என்று ஆலயமணி திரையிசைப் பாடலில் பதிவுசெய்துள்ளார்.

**குழந்தை பாடும் தாலாட்டு**

சமயத்தில் குழந்தைபாடும் தாலாட்டும் குதூகலத்தை தருகின்றது. **ராமு** திரைப்படத்தில்,

**“பச்சைமரம் ஒன்று இச்சைக் கிளிரெண்டு**

**பாட்டுச்சொல்லித் தூங்கச்சொல்வேன் ஆரீரரோ!**
**கட்டித்தங்கம் என்றுகன்னம் தொட்டுக்கொண்டு**
**ஆசைமுத்தம் தந்தேன்ஆரீரரோ" என (கவி. கண். தி.பா, தொ-1)**

தாய் தந்தையைப் பாட்டுப்பாடி தூங்கவைக்கும் குழந்தையின் தாலாட்டும் மனதிற்கு மகிழ்வைத்தரும் தாலாட்டாக விளங்குகிறது.

**பாதுகாவலர் பாடும் தாலாட்டு**

ஆதரவில்லாத அனாதைகளுக்கு அன்பைக் குழைத்துப் பாடும் பாதுகாவலர் பாடும்பாசத் தாலாட்டாக **எங்கமாமா** திரைப்படத்தில்,

**"செல்லக்கிளிகளாம் பள்ளியிலே செவ்வந்திப்பூக்களாம் தொட்டிலிலே**
**என்பொன்மணிகள் ஏன்தூங்கவில்லை எந்தமனதில் பாசம்உண்டோ**
**அந்தமனமே அம்மாஅம்மா இன்பக்கனவை அள்ளித்தரவே இறைவன்**
**என்னைத் தந்தானம்மா" (கவி. கண். தி.பா, தொ-1)**

என தாயாகி மாறி தாலாட்டுப்பாடும் பாதுகாவலரின் தாலாட்டும் கேட்போரின் கண்களில் கண்ணீரை வரவழைக்கிறது.

**எதிர்மறைத் தாலாட்டு**

குழந்தையைத் தூங்கவைக்கப் பாடும் தாலாட்டை, ஒருதாய் தன்னுடைய குழந்தையின் உயிரைக்காக்க தூங்காமல் இருப்பதற்காக துயரத்தில் பாடும் தாலாட்டுப் பாடலாக **சக்திலீலை** திரைப்படத்தில்,

**"உறங்கக்கூடாது கண்ணே மயங்கக்கூடாது இன்றுசிரிக்கட்டும்**
**சிட்டுஇந்த அன்னைகண் பட்டுமானம் காத்தபிள்ளைஎன்னை**
**நாளும்காக்க வேண்டும்நாளை எண்ணிவாழும்**
**அன்னை ஆசைதீர்க்க வேண்டும்" (கவி. கண். தி.பா, தொ-5)**

என எதிர்மறை தாலாட்டுப் பாடலாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் நீலவானம் திரைப்படத்தில்,

**"மலரில்லாத தோட்டமா? கனியில்லாதவாழையா? மகனில்லாத**
**அன்னையா? மகனேநீஇல்லையா? வண்ணவண்ணவான் முகம்எண்ண எண்ணதேன்தரும்**
**தெய்வமே தாயிடம் தேர்ஏறி ஓடிவரும்" (கவி. கண். தி.பா, தொ-1)**

என குழந்தை இல்லாத தாய் குழந்தை இருப்பதாக எண்ணிபாடும் எதிர்மறை தாலாட்டாக விளங்குகிறது.

**முடிவுரை**

தாய்மையின் தனிசிறப்பு பெற்ற தாலாட்டை அனைத்து உறவுகளும் பாடுதல் மரபாகும். தாலாட்டுக்குப் பெயர் பெற்றதாலேயே 'தன்னைவிட தாலாட்டு பாடுவதில் தன்னிகரற்றவர் கண்ணதாசன்' என **பட்டுக்கோட்டையார்** பகிரங்கமாக கண்ணதாசன் அவர்களைப் பாராட்டியுள்ளார். கண்ணதாசன் அவர்களின் தாலாட்டுப் பாடல்களில் தாய்மையின் பாசம், தந்தையின் அன்பு, சித்தியின் அக்கரை, தாய்மாமனின் தாயுள்ளம், அண்ணனின் அரவணைப்பு என அனைத்து உறவுகளின் பங்களிப்புகளிலும் அமைந்த தாலாட்டுப் பாடல்கள் பற்றி இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**ஆய்வுக்கு உதவிய நூல்கள்**

[1] கவிஞர் கண்ணதாசன். *திரை இசைப்பாடல்கள் தொகுதி* 1, கண்ணதாசன் பதிப்பகம், 2011.

[2] கவிஞர்கண்ணதாசன். திரை இசைப்பாடல்கள் தொகுதி 2, கண்ணதாசன் பதிப்பகம், 2014.

[3] கவிஞர்கண்ணதாசன். திரை இசைப்பாடல்கள் தொகுதி 5, கண்ணதாசன்பதிப்பகம், 2014.

[4] ந.சுப்புரெட்டியர். பாரதியார் கவிதைகள். அமர்ஆப்செட், 2009

[5] கோ.பெரியண்ணன். *எளிய இனிய உரையில் கம்பராமாயணம்.* அமர்பதிப்பகம், 2017

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.